அன்றன்றுள்ள அப்பம் வழங்கும்

# ஒலிவமரக் கன்றுகள்

ஏப்ரல் - 2026 | மரம் - 5 | கன்று - 4 | ஆண்டு சந்தா ரூ. 250/- | தனிப்பிரதி ரூ. 25/- | ஆயுள் சந்தா ரூ. 2500/-




ஆசிரியர்: J. ஜோசப் ஆஸ்பார்ன் ஜெபத்துரை

# குட்டீஸ் உங்களுடன் 1 நிமிடம்!

இயேசப்பாவின் அன்பு செல்லப் பிள்ளைகளே, அவர்களை வரமாய் கிறிஸ்துவிடமிருந்து பெற்றோரே, உங்கள் அனைவருக்கும் அன்பராம் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்.

சுட்டெரிக்கும் கோடை வெயில் எட்டிப் பார்க்கும் காலமிது. உங்கள் உடல் நலனில் அக்கறை கொள்ளுங்கள். வெயிலில் அதிக நேரம் விளையாட வேண்டாம். இந்தக் கோடைக்கால விடுமுறை நாட்களை பயனுள்ள வகையில் செலவிடுங்கள். உங்கள் தனித்திறமைகளை இந்த நாட்களில் வளர்த்துக் கொள்ளுங்கள். கிடைக்கும் நல்வாய்ப்புகளை நழுவ விடாதீர்கள். உங்கள் நண்பர்களையும், உறவினர்களையும் சந்தித்து உறவுகளை மேம்படுத்திக்கொள்ளுங்கள். ஏனென்றால், கண்ணால் காண்கின்ற மனிதர்கள் மூலமே காணப்படாத தேவனின் அன்பின் மகத்துவத்தை நம்மால் வெளிப்படுத்த முடியும். நாமெல்லாரும் இயேசு கிறிஸ்துவால் கிரயத்திற்கு கொள்ளப்பட்டவர்கள் என்பதை மறவாதிருந்து நமது எஜமானாயிருந்து இயேசப்பா நம்மை எந்த வழியில் நடத்துகிறாரோ, அந்த வழியில் நடந்து, அவருடைய அன்பை நாம் மற்றவர்களுக்கும் வெளிப்படுத்த வேண்டும்.

## நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டிய 4T

### 1. THINK (நினைத்துப் பார்)

தேவன் உனக்கு செய்த நன்மைகளையெல்லாம் நினைத்துப்பார். ஒரு டைரியை எடுத்து அதில் தேவன் உன்னைக் கடந்த வருடம் முழுவதும் அற்புதமாக நடத்தின விதங்களை எழுது. மேலும் நீ நடந்து வந்த பாதைகளிலெல்லாம் உன்னை பத்திரமாகவும், சமாதானமாகவும் கர்த்தர் நடத்தின விதத்தை நினைவு கூரு.

### 2. THANK (நன்றி சொல்)

தேவன் உனக்கு செய்த சகல நன்மைகளையும் நினைத்து அவருக்கு நன்றி சொல். ஒவ்வொரு நிமிடமும் அவர் உனக்கு காண்பித்த தயவு மற்றும் அவரது இரக்கத்திற்காக நன்றி சொல். உன்னுடைய வறட்சியான காலங்களில் உன்னை நடத்தின விதத்தையும், உன்னை நீர்ப்பாய்ச்சலான தோட்டத்தைப்போல மாற்றினதையும் நினைத்து நன்றி சொல்.

### 3. TRUST (நம்பு)

தேவனை எக்காலத்திலும் நீ நம்பு. கர்த்தரே தேவன் என்று அறிந்துக்கொள். அவரைப்போல வேறு தேவன் இல்லை. அவர்தான் உனக்கு கன்மலை. அவர்தான் உன் இரட்சகர். அவரைப்போல கரிசனையுள்ளவர் ஒருவருமில்லை. உன் முழு இருதயத்தோடு கர்த்தரை நம்பு. அவர் உன்னை மறப்பதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை. அவரை நம்புகிறவனோ செழிப்பான்.

### 4. THROW (எறி)

உன்னுடைய எல்லாப் பிரச்சனைகளையும் பாரங்களையும் கர்த்தர் மேல் வைத்துவிடு. உன்னுடைய பிரச்சனைகள் எவ்வளவு பெரிதாக இருந்தாலும் அதற்கு தேவனால் தீர்வு உண்டு. உன்னுடைய இருளான பாதையை பிரகாசமான பாதையாக மாற்றவல்லவர் அவர். அவரது உள்ளங்கைகளில் உன்னை வரைந்திருக்கிறார். ஆகவே எதைக்குறித்தும் கவலைப்பட்டு கலங்காதே. அவர் உன்னை ஆசீர்வதிக்கிறார்.



அன்புடனும், அக்கறையுடனும்:



*அங்கிள்.* **J. ஜோசப் ஆஸ்பார்ன் ஜெபத்துரை**

# கருங்காலி

(EBONY) (தும்பி, ஆக்சா, சோலைக்கரி மரம், தூமரம்)







இது ஒரு அருமையான மரம். கடைசல் வேலைகளுக்கு மிகவும் உகந்த மரம். இம்மரத்தைக்கொண்டு பல்வேறு அழகிய சிற்பங்கள் செய்யலாம். மேற்கத்திய இசைக் கருவிகள் செய்ய மிகச் சிறந்த மரம். இன்று இந்த மரங்களெல்லாம் பெருமளவு வெட்டப்பட்டு மறைந்து வருகிறது. ஒரு காலத்தில் திருவாங்கூர் சமஸ்தானத்தில் ''அரசர்களது மரம்'' என்று போற்றப்பட்டுள்ளது. ஆனால், இன்றோ ஐக்கிய நாடுகள் சபையின் சுற்றுப்புறவியல் திட்டத்தின் ஆதரவில் காப்பாற்றப்பட வேண்டிய நிலைக்கு வந்துள்ளது.

## விஞ்ஞானப் பெயர்

''டையோஸ்பைரோஸ் எபனம்'' (DIO SPYROS EBUNUM). தாவரக் குடும்பம்: ''எபனேசி.'' டையோஸ் என்றால் புனிதமானது. ப்யூரோஸ் என்றால் தானியம். உண்ணக்கூடிய பழங்களைக் கொண்ட ''பெர்சிமன்'' பழ மரபிற்கு ''டையோஸ் பைரோஸ்'' என்ற பெயர் சூட்டப்பட்டுள்ளது. அப்பிரிவைச் சேர்ந்த கருங்காலிக்கும் இப்பெயர் வந்துள்ளது. எபனம் என்பது ''எபனோஸ்'' என்ற கிரேக்கச் சொல்லிலிருந்து உருவாகிய பெயராகும்.

## பொது விவரம்

கருங்காலி மரம் ஆப்பிரிக்கக் கண்டத்திலுள்ள டான்சானியா நாட்டில் பெருமளவில் வளர்ந்து வந்துள்ளது. இன்று அங்கு வெட்டப்பட்டு, மறைந்து வருவதைக் கண்டு, ஐக்கிய நாடுகள் சபையின் சுற்றுப்புறவியல் திட்டத்தினர் கருங்காலி மரத்திற்கு ஆதரவு அளித்து, மேலும் வளர்ந்திட முயன்று வருகின்றனர்.

நம் நாட்டில், தக்காணம் மற்றும் கர்நாடகப் பகுதியில் அதிகமாகக் காணப்படுகிறது. தமிழகத்தில் திருநெல்வேலி மாவட்டக் காடுகளில் வளர்ந்துள்ளது. ஒரு காலத்தில்








நெல்லை மாவட்டம் பணகுடிப் பகுதியில் இம்மரங்கள் அடர்ந்து வளர்ந்திருந்ததாக ‘‘பௌர்டிலான்’’ என்ற வனவியல் அறிஞர் 1908ஆம் ஆண்டில் எழுதிய நூலில் குறிப்பிட்டுள்ளார். இங்கு இப்பொழுது, அறவே மறைந்து விட்டது. மற்றபடி தமிழ்நாட்டின் வடமாவட்டங்களிலுள்ள குன்றுப் பகுதிகளில் சில மரங்கள் உள்ளன. கருங்காலி மரம் 250-1000 மீட்டர் உயரப்பகுதியில் வளரும் மரமாகும். வறண்ட காடுகளிலும் வளர்கிறது. பீடி இலை மரங்களுடன் காணப்படுகிறது. ஸ்ரீலங்காவில் இந்த கருங்காலி மரம் மிகவும் உயரமாக வளருகிறது. அந்த அளவிற்கு தமிழ்நாட்டில் வளருவதில்லை. 15-20 மீட்டர் உயரத்திற்கே வளருகிறது.

கருங்காலி மரத்தின் இலைகள் நீண்ட முட்டை வடிவில் 6-10 செ.மீ. நீளமும், 3-5 செ.மீ அகலமும் உடையவை. இலையின் நுனி கூர்மையாகவோ அல்லது மழுப்பாகவோ இருக்கும். இலையின் கீழ்ப்புறம் பின்னிய நரம்புகளுடன், கருப்புப் பொடி துவியது போன்று இருக்கும். இலைச் சந்துகளில் ஆண் பூக்களும் பெண் பூக்களும் தனித்தனியாக உருவாகும். ஆண் பூக்கள் கொத்துக்கொத்தாக இருக்கும். பெண் பூக்கள் தனித்தனியாக இருக்கும். இப்பூக்கள் சிறியவை. பச்சைச் சாயையுள்ள மஞ்சள் நிறமுடையவை. கருங்காலி மரத்தின் கனி, முட்டை வடிவில் சிறு மூக்குடன் கிண்ணம் போன்று புற இதழ்களுடனும் இருக்கும். இதன் அளவு 1.5-2.0 செ.மீ. கடினமான தோடுடையது. இதனுள் 1.0 செ.மீ. அளவில் கறுப்பு நிற விதை ஒன்றிருக்கும்.

## பயன்கள்

**கனி :** கனியை உண்ணலாம். சிறு அளவில் பழச்சதை இருக்கும்.

**மரம் :** வாணிபத்தில் ‘‘அசல் எபனி’’ என்று அழைக்கப்படும். கருங்காலி மரம் பிற எபனி மரங்களைவிட, மிகவும் அதிகத் தரமுடையது. மென் பகுதி சாம்பல் நிறமும், வைரப்பகுதி நல்ல கருமை நிறமுடையது. நன்கு வளர்ந்து முற்றிய மரங்களில் தான், வைரப்பகுதி அதிக அளவில் இருக்கும். முதிர்ந்த மரங்களில் கூட, அடிப்பகுதியில் 35% அதற்கு மேல் படிப்படியாக வைரப்பகுதியில் பரிமாணம் குறைந்துக் கொண்டேவரும். மரத்தை

வெட்டியதுமே, மென் பகுதியையும், வைரப்பகுதியையும் தனித்தனியாக பிரித்திடவேண்டும். வைரப்பகுதியுள்ள மரத்தை அடுக்கி வைத்து, நிதானமாக உலர்த்த வேண்டும். இல்லையெனில் மரத்தில் சிறு வெடிப்புகள் தோன்றி, அதனுடைய வியாபாரத் தரம் குறைந்துவிடும். இந்த வைரப்பகுதி தேக்குமரத்தை விட மிகவும் கனமானது. ஒரு மரத்தின் எடை 1151 கிலோவாக இருக்கும். இந்த மரத்தை நன்றாக அறுத்து மரச்சாமான்களை தயாரிக்கலாம். நன்கு இழைக்கவும் இயலும். கடைசல் வேலைகளுக்கு மிகவும் உகந்தது. சிற்பங்கள் செதுக்குவதறக்கு மிகவும் ஏற்றது. அழகிய வேலைப்படுகளுள்ள பல்வேறு வகையான மரச்சாமான்களும் செய்திடலாம். இதை திருவாங்கூர் சமஸ்தான மரமாக (ROYAL TIMBER OF TRAVANCORE) அந்தஸ்து அளிக்கப்பட்டது. இந்த கருங்காலி மரத்தைக் கொண்டு மேற்கத்திய இசைக் கருவிகளான கிடார், பியானோ, கிளாரினேட் போன்றவைகளைச் செய்யலாம். இதன் காரணமாகவே இம்மரம் ஒரு கன மீட்டர் விலை ரூ.10,000 டாலர்கள் அளவில் உயர்ந்துள்ளது. இம்மரத்தை இராசயன ஆய்வு செய்தபோது, 10.5% ஈரம், 36.8% லிக்னின், 13.8% பெண்டோசான்கள் ஆகியவை இருப்பதாக கணக்கிட்டுள்ளனர்.

பயிர் முறை : இலையுதிர்க் காடுகளில் வளரும் இம்மரம் ஆழமான செம்மன் கண்டம் உடைய இடங்களில் வளர்க்கலாம். நீர் வடியும் சூழ்நிலையும் இருக்கவேண்டும். எனவே மலைப்பகுதிகளுடன் கூட, உள் நாட்டில் செம்மண் பகுதிகளிலும் வளர்க்க முடியும். குறிப்பாக குன்றுப்பகுதிகளில் மண் கண்டத்தை ஆராய்ந்து ஆங்காங்கே நிலப்பகுதிகளைத் தேர்ந்தெடுத்து பயிர் செய்வது உகந்தது. இம்மரம் பயன்பாட்டிற்கு வர நீண்ட காலமாகும். 25 வருடங்கள் வளர்ந்த பின்னும் இம்மரத்தின் அடிவிட்டம் 0.5 மீட்டர் அளவில்தான் இருக்கும். 40-50 ஆண்டுகள் சென்ற பின்னரே பயன்பெற முடியும். மிகச் சிறந்த வைரப்பகுதி அதிக அளவில் உருவாக, 200 ஆண்டுகள் கூட ஆகும். எனவே, தனி விவசாயிகளைவிட, சமுதாய நிறுவனங்களும், அரசுத் துறைகளும் இம்மரத்தைப் பயிரிடுவது அவசியமாகும்.

கிராமங்களில் மேய்ச்சல் தரை, வாரிப்புறம்போக்கு, கால்வாய்க் கரை, குளக்கரை ஆகிய இடங்களில் எல்லாம் கருங்காலி மரங்களை வளர்க்கலாம். கருங்காலி மரத்தை வளர்க்க, விதையை நாற்றுவிட்டு 30 செ.மீ உயரம் வளர்ந்ததும் நடலாம். ஆரம்பத்தில் நிழல் தேவைப்படுவதால், பிறச் செடிகளின் அருகாமையில் நட்டு, வளர்ந்ததும், அவற்றை அகற்றி விடலாம். 6x6 மீட்டர் இடைவெளி மிகவும் உகந்ததாயிருக்கும்.

''நான் செய்கிறது இன்னதென்று இப்பொழுது நீ அறியாய், இனிமேல் அறிவாய்''.

யோவான் 13:7



# வேதமே வெளிச்சம்


பகை
விரோதங்களை எழுப்பும்;
அன்போ
சகல பாவங்களையும்
மூடும்.
நீதிமொழிகள் 10:12


இயேசு: "கேளுங்கள், அப்பொழுது
உங்களுக்குக் கொடுக்கப்படும்;
தேடுங்கள், அப்பொழுது
கண்டடைவீர்கள்; தட்டுங்கள்,
அப்பொழுது உங்களுக்குத்
திறக்கப்படும்."
லூக்கா 11:9
God bless you


சங்கீதம் 126:3
கர்த்தர் நமக்குப் பெரிய
காரியங்களைச் செய்தார்;
இதினிமித்தம்
நாம் மகிழ்ந்திருக்கிறோம்.


என் ஜனங்கள்
நான் அளிக்கும்
நன்மையினால்
திருப்தியாவார்கள்
என்று கர்த்தர்
சொல்லுகிறார்.
எரேமியா 31:14
God bless you

# குள்ள வாத்து

வாத்து, குள்ள வாத்து என்பன வேறு வேறு இனத்தை சேர்ந்தவை. நாம் இரண்டையும் வேற்றுமையின்றி வாத்து என்றே அழைக்கிறோம். விஞ்ஞான ரீதியில் இரண்டுக்கும் வெவ்வேறு பெயர்கள் உண்டு. ஆங்கிலேயர்கள் வாத்தை (GOOSE) என்றும், குள்ளவாத்தை (DUCK) என்றும் அழைக்கிறார்கள்.

உடலமைப்பிலும் பழக்கவழக்கங்களிலும் வாத்துக்கும் குள்ள வாத்துக்கும் உள்ள வேறுபாடுகளைக் கவனிப்போம்.

அலகு : குள்ள வாத்துக்கு அலகு தட்டையாகவும் நீண்டும் காணப்படும். வாத்துக்கு இது சிறியதாக இருக்கும்.

கழுத்து : குள்ள வாத்துக்கு கழுத்து குறுகியிருக்கும்.

கால்கள் : வாத்தைவிட குள்ள வாத்தின் கால்கள் குட்டையாகயிருக்கும்.

தோற்றம் : தரையில் நடமாடும்போது குள்ள வாத்து அழகாக இராது. ஆனால், வாத்து அன்னப்பறவைப்போல அழகாக நடக்கும்.

இயல்புகள் : குள்ளவாத்து தண்ணீரில் நடமாடித்திரிய விரும்பும். ஆனால், வாத்து விரும்புவதில்லை. குள்ளவாத்துக்கு ஆயுள் மூன்று வருடம்தான். வாத்து 10, 12 வருடமும் அதற்கு மேலும் உயிர்வாழும். குள்ள வாத்து ஒரு வருடத்திற்கு 180ம் அதற்கு மேலும் முட்டையிடும். ஆனால், வாத்து 60 முட்டைத்தான் இடும்.



இக்காலத்தில் தென்னிந்தியாவில் நன்செய் நிலப்பிரதேசங்களில் பலர் குள்ள வாத்துக்களை கூட்டங்கூட்டமாக வளர்த்து வருகிறார்கள். அவைகளை ஆறுகள், குளங்கள், ஏரிகள் போன்ற இடங்களுக்கு ஓட்டிச் செல்லுகிறார்கள். அறுவடையான வயல் நிலங்களில் அவைகளை மேய விடுகிறார்கள்.

இரவு நேரங்களில் குள்ள வாத்துக்களை அடைத்து வைப்பதற்காக நாணலும் கயிறும் கொண்டு நீளமான படல்களை பாய் போலச் சுருட்டி எடுத்துப் போக வசதியுள்ளவைகளாக செய்துக் கொள்கிறார்கள். குஞ்சுகளை அடைக்க கண்கள் அமைந்த கூடைகளை தயார் செய்கிறார்கள்.

## வளர்ப்பில் அனுகூலம்

குள்ள வாத்து முட்டைகளுக்குக் DEMAND அதிகம். வாத்திறைச்சி மிகவும் விலை உயர்ந்தது. கோழி வளர்ப்பை விட வாத்து வளர்ப்பதில் அதிக லாபம் உண்டு. ஏனென்றால், கோழிகளைப்போல வாத்துகளுக்கு போஷணை முறைகள் தேவையில்லை. கோழிக்கு சிறந்த உணவு வகைகள் வேண்டும். ஆனால் வாத்துக்களோ புழு, பூச்சி, நத்தை, தவளை, சிதறிக்கிடக்கும் புல் பூண்டு, அற்பத் தானியங்கள் முதலியவற்றைத் தாமாகவே தேடிக் கொள்ளும். கோழிகளுக்கு நோய் நொடிகள் அதிகம். தொற்று நோய்க் காரணமாக கோழிகள் அழிந்துவிடக்கூடும்.

வாத்துகளுக்கு நோய் என்பதேயில்லை. கோழிகளுக்கு ஆரோக்கியமான, விஸ்தாரமான வீடுகள் அவசியம். நடமாட அதிக இடம் தேவை. செலவுகள் அதிகம். குள்ள வாத்துகளுக்கு அதிக செலவுகள் இல்லை. நீர் நிலை சூழல்களில் குள்ள வாத்து காலங்களைக் கழிக்கும். திறந்தவெளிகளில் குள்ள வாத்துக்களை நெருக்கமாக அடைத்து வைக்கலாம். கோழி இறைச்சி வேண்டுமானால் குஞ்சுகள் குறைந்த பட்சம் ஐந்து மாத காலமாக வளர்ச்சியடைந்திருக்க வேண்டும். ஆனால், மூன்று மாதத்திற்குக்குள்ளாகவே, வாத்து குஞ்சுகளின் இறைச்சி தின்பதற்கு ஏற்றதாகிவிடும்.

குள்ள வாத்து வருடத்தில் ஒரு கோழி தரக்கூடியது போல, இரண்டு பங்கு முட்டைகளைத் தருகின்றன. நாட்டுக் கோழி ஒன்று 70 முதல் 100 முட்டைகளைத் தருமானால், ஒரு குள்ள வாத்து 150 முதல் 180 முட்டைகளைத் தரக்கூடும். நியூஸிலாந்தில் ஒரு வாத்து ஓராண்டில் 363 முட்டைகளைத் தந்ததாம். சாதாரணமாக இந்த அடைக்காக்கும் பறவைகள் குறைவாகவே முட்டையிடும். நாட்டுக் கோழி அடைகாக்கும். ஆனால், குள்ள வாத்து அடைகாப்பதில்லை. ஆகவே, அதனிடம் அதிகமான முட்டைகளை பெற முடியும்.

குள்ள வாத்து எருவினால் பயிர்கள் செழித்தோங்கிவளரும். பூச்சிகளை குள்ள வாத்துக்கள் தின்று அறவே ஒழித்துவிடுகின்றன. குள்ள வாத்துக்கள் இருக்குமிடத்தில் கால்நடைகளுக்கு நோய்கள் இருப்பதில்லை. குள்ள வாத்துக்களை வளர்க்க எந்தவிதமான பழக்கமோ, திறமையோ தேவையில்லை. ஒரே சமயத்தில் 100 முதல் 150 குள்ள வாத்துக்களை வளர்க்கலாம்.

## இயல்புகள்

குள்ள வாத்து தண்ணீரை மிகுதியாக விரும்பும் பறவை. குளம் குட்டைகளைக் கண்டால் அதற்கு ஆனந்தம் மகிழ்ச்சியாகிவிடும். ஓடும் நீரைக் கண்டால் அதன் மகிழ்சிக்கு எல்லையே கிடையாது. தண்ணீரில் நீந்த அவைகளுக்கு சலிப்பே உண்டாகாது. இவைகளுக்கு அதிகமாக குடிநீர் வேண்டும். குளிந்த சூழ்நிலைகள் அவைகளுக்குத் தேவை. உணவை உட்கொள்ளும்போது, ஒரு வாய் தண்ணீர், ஒரு வாய் உணவு என்று மாற்றி மாற்றி உட்கொள்ளும். சரிவு நிலங்களில் ஏறுவதும் இறங்குவதும் வாத்துகளுக்கு விளையாட்டுப் பொழுது போக்காகும்.

குள்ள வாத்துக்கள் கூட்டம் கூட்டமாக கூடி வாழும். ஒரு வாத்தை மற்ற வாத்திடமிருந்து பிரித்து வைத்தால் அவைகளுக்கு சமாதானமே இருக்காது. இனப்பற்று அதனிடம் இருப்பதினால், ஒரு நாள் தாராளமாக 100 அல்லது 150 குள்ள வாத்துக்களைத் தனியாக சமாளிக்க முடியும். பிரயாணத்தின்போது, நீண்ட ஒரு மூங்கிலை வைத்துக் கொண்டு ஒதுக்குபுறமாய்ச் செல்லும்படி ஜாடை காட்டினாலே போதும், அவைகள் கட்டளைக்குப் கீழ்ப்படிந்து நடக்கும்.

குள்ள வாத்து மிகவும் சாந்தமும், மென்மையும், பயந்த சுபாவமும் உள்ளது. நடுங்குரலைக் கேட்டால் உடனே பயந்து விடும். யாராவது அதை அச்சுறுத்தினால் அது



நன்கு வளருவதில்லை. குள்ள வாத்துகள் காலையில் வெயில் ஏறுவதற்கு முன்பும், மாலையில் வெயில் மறைந்தபிறகும் முட்டையிடுகின்றன. ஆகவே, மேய்ச்சலுக்கு ஒட்டிச் செல்கிறவர்கள் காலை 9.00 மணிக்கு மேல் ஒட்டிச் சென்று மாலை 5.30 மணிக்கும் வீட்டுக்குத் திரும்பி ஒட்டிக்கொண்டு வந்து விடுவார்கள். நேரம் கழிந்து ஒட்டி வந்தால், வழியிலேயே முட்டையிட்டு விடும். குள்ள வாத்துக்கள் மிகுதியாக முட்டைகள் இடுவதினால் விரைவில் தளர்ச்சியடைந்து 3 வருடங்களிலேயே இறந்துவிடுகின்றன.

### குள்ள வாத்து இனங்கள்

குள்ள வாத்துக்களில் முட்டை இனம் இறைச்சி இனம் என இருவகைகள் உண்டு. முன்னவை கனமற்றவை. இந்த இனத்தில் ஒவ்வொன்றும் சராசரி 1 1/2 கிலோ முதல் 2 கிலோ எடை இருக்கும். ஆனால் அதிகமாக முட்டையிடும் இறைச்சி இனங்கள் கனமான பறவைகள் ஒன்றின் சராசரி எடை 2-3 கிலோ எடையிருக்கும். இவைகள் அதிகமாக முட்டையிடாது. முட்டை இனப்பறவைகள் ஒரு வருடத்தில் 180 முட்டையிட்டால் இறைச்சியினப் பறவை 100 முட்டைகள்தான் இடும்.

### அடைக்காப்பு

குள்ள வாத்தினிடம் தாய்மைக் குணமில்லை. அது தன் முட்டைகளை அடைகாப்பதில்லை. குஞ்சுகளையும் வளர்ப்பதில்லை. அதன் முட்டைகளைக் கோழிகளே அடைகாத்து, முட்டைகளிலிருந்து குஞ்சுகள் வந்ததும் அவைகளை வளர்த்து வருகின்றன.

கோழிகள் குஞ்சு பொரிக்க 21 நாள் அதை அடைகாக்க வேண்டும். ஆனால், வாத்து முட்டைகளை 28 நாள் அடையில் இருந்தால்தான் குஞ்சுகள் வெளிவரக்கூடும். ஒரு பெட்டைக் கோழி 8 முதல் 10 வாத்து முட்டைகளை அணைத்து அடைக்காக்கும்.









# பிறவிக் குருடன் பார்வை பெறுதல்!

## (யோவான் 9:1-41)



இந்தக் குருட்டு மனிதனைப்போன்று இயேசுவால் குணமாக்கப்பட்டோர் அநேகர், அவருடைய சீடர்களாக மாறினார்கள். ஆனால் மதப்பற்றுள்ளவர்கள் என்று கூறிக்கொள்ளும் யூதப் பரிசேயர்கள், இயேசு தேவனால் அனுப்பப்பட்டவர் என்று நம்ப மறுத்ததால், அவர்களெல்லாரும் ஆன்மீக குருட்டாட்டதில் இருந்துவிட்டார்கள்.

ஒரு சமயம் இயேசு பிறவிக் குருடனாகிய ஒரு மனுஷனைக் கண்டார். அப்பொழுது அவருடைய சீஷர்கள், அவரை நோக்கி: ரபீ இவன் குருடனாய்ப் பிறந்தது யார் செய்த பாவம், இவன் செய்த பாவமோ, இவனைப் பெற்றவர்கள்



செய்த பாவமோ என்று கேட்டார்கள். அதற்கு இயேசு, அது இவன் செய்த பாவமல்ல, இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமுமல்ல. தேவனுடைய கிரியைகள் இவன் மூலமாக வெளிப்படும் பொருட்டு இப்படி குருடனாக பிறந்தான் என்றார்.

மேலும், பகற்காலமிருக்கும் மட்டும் நான் என்னை அனுப்பினவருடைய கிரியைகளைச் செய்ய வேண்டும். ஏனென்றால், ஒருவனும் கிரியைச் செய்யக் கூடாத இராக்காலம் ஒன்று வருகிறது. நான் இந்த உலகத்தில் இருக்கையில், இந்த உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன் என்றார். இவைகளையெல்லாம் சொல்லிவிட்டு, இயேசு தரையிலே துப்பி, உமிழ் நீரினால் சேறுண்டாக்கி, அந்தச் சேற்றை குருடனுடைய கண்களில் பூசி, அவனைப் பார்த்து நீ போய் சீலோவாம் குளத்திலே உன் முகத்தைக் கழுவு என்றார். அந்தப் பிறவிக் குருடனும் அப்படியே சீலோவாம் குளத்திற்கு போய் தன் முகத்தைக் கழுவினான். அந்நேரமே அவன் பார்வையடைந்தான்.



அப்பொழுது, அவன் குருடனாயிருந்த போது, அவனைக் கண்டவர்கள், இவன் உட்கார்ந்து பிச்சை கேட்டுக்கொண்டிருந்தவன் அல்லவா என்றார்கள். ஒரு சிலர் அவன் தான் என்றார்கள். ஒரு சிலரோ, இவன் அவனல்ல அவனுடைய சாயலாக இருக்கிறான் என்றார்கள். ஆனால், பார்வையடைந்த அந்தக் குருடனோ, நான்தான் அவன் என்றான். உடனே, அவர்கள் அவனிடத்தில், உனக்கு எப்படி பார்வை கிடைத்தது என்று கேள்வி கேட்டார்கள்? அதற்கு அவன், இயேசு என்பவர் சேறுண்டாக்கி என் கண்களில் பூசி, சீலோவாம் குளத்திலே போய் முகத்தைக் கழுவு என்றார். நான் அப்படியே செய்தேன். உடனே பார்வையடைந்தேன் என்றான். உடனே, அவர்கள் அவனிடத்தில் அந்த இயேசு எங்கே என்று கேட்டார்கள்? அவன் எனக்குத் தெரியாது என்றான். அவனை அவர்கள் பரிசேயரிடத்திற்குக்கொண்டு போனார்கள்.

இயேசு, அந்த குருடனுக்கு பார்வை தந்த நாள் ஓய்வு நாளாயிருந்தது. ஆதலால், பரிசேயர் அவனிடத்தில் எப்படி பார்வையடைந்தாய் என்று மறுபடியும் கேட்டார்கள். அதற்கு அவன், அவர் என் கண்களில் சேற்றைப் பூசினார், நான் கழுவினேன், இப்போது காண்கிறேன் என்றான். அதைக் கேட்ட பரிசேயர், அந்த மனிதன் ஓய்வு நாளைக் கைக்கொள்ளாததினால் அவன் தேவனிடத்திலிருந்து வந்தவனல்ல என்றார்கள். இப்படிபட்ட விந்தைச் செயல்களை எப்படிச் செய்வான் என்றார்கள். இப்படியாக அவர்களுக்குள்ளே பிரிவினையுண்டாயிற்று.

மறுபடியும், அவர்கள் பார்வையடைந்த அந்த குருடனைப் பார்த்து, உனக்குப் பார்வை தந்தானே அவனைக் குறித்து நீ என்ன சொல்லுகிறாய் என்றார்கள். அவன் அவர் ஒரு தீர்க்கதரிசி என்றான். அவன் குருடனாயிருந்து பார்வையடைந்ததை யூதர்கள் நம்பாமல், பார்வையடைந்தவனுடைய பெற்றோரை அழைப்பித்து, அவர்களிடம்: உங்கள் மகன் குருடனாய் பிறந்தான் என்று சொல்லுகிறீர்களே, அவன் இவன்தானா? இவனானால், இப்பொழுது இவன் எப்படிப் பார்வையடைந்தான் என்று கேட்டார்கள். அவனுடைய பெற்றோர்கள் இவன் எங்கள் மகன்தான். பிறவிலேயே குருடனாகப் பிறந்தான். ஆனால், இவன் இப்போது பார்வையடைந்த வகையோ எங்களுக்குத் தெரியாது. இவன் கண்களை யார் திறந்தார்கள் என்பதும் எங்களுக்குத் தெரியாது. இவன் வயது வந்தவன்தானே, இவனையே

கேளுங்கள் இவன் சொல்லுவான் என்றார்கள். அவனுடைய பெற்றோர்கள் யூதர்களுக்கு பயந்ததினால் இப்படிச் சொன்னார்கள். ஏனென்றால், இயேசுவைக் கிறிஸ்து என்றுச் சொல்லி அவரை ஏற்றுக் கொள்வானானால், அவனை ஜெப ஆலயத்துக்கு விலக்கி வைக்கவேண்டுமென்று யூதர்கள் அதற்கு முன்னமே கட்டுப்பாடு செய்திருந்தார்கள். இதனிமித்தம், இவன் வயதுள்ளவனாயிருக்கிறான், இவனையே கேளுங்கள் என்று அவனுடைய பெற்றோர்கள் சொன்னார்கள்.

ஆகவே, அவர்கள் குருடனாயிருந்த அந்த மனிதனை மீண்டும் அழைத்து, நீ தேவனுக்கு மகிமை செலுத்து, உன்னை பார்வையடையச் செய்த மனிதன் பாவியென்று நாங்கள் அறிந்திருக்கிறோம் என்றார்கள். அவனோ அதைக் கேட்டுவிட்டு, அவர் பாவியென்று எனக்குத் தெரியாது. நான் குருடனாயிருந்தேன். இப்போது காண்கிறேன். இது ஒன்றுதான் எனக்குத் தெரியும் என்றான். அவர்கள் திரும்பவும் அவனிடத்தில் உனக்கு என்ன செய்தான், உனக்குப் பார்வை எப்படித் தந்தான் என்று கேட்டார்கள். அவன் அவர்களுக்கு பிரதியுத்தரமாக, நான் ஏற்கனவே உங்களுக்குச் சொன்னேன். நீங்கள் கேளாமற் போனீர்கள். மறுபடியும் கேட்க வேண்டியதென்ன? அவருக்குச் சீடராக விரும்புகிறீர்களா என்றான்.

அப்போது, அவர்கள் அவனைத் திட்டி, நீ அவனுடைய சீடன், நாங்கள் மோசேயினுடைய சீடர். மோசேயோடு தேவன் பேசினாரென்று அறிவோம். இவன் எங்கேயிருந்து வந்தான் என்று நாங்கள் அறியோம் என்றார்கள். அதற்கு அந்த மனிதன், அவர் எங்கேயிருந்து வந்தவரென்று நீங்கள் அறியாதிருக்கிறது வியப்பான காரியம். தேவன் பாவிகளுக்கு செவி கொடுப்பதில்லையென்று அறிந்திருக்கிறேன். ஒருவன் தேவ பக்தியுள்ளவனாயிருந்து, அவருக்கு விருப்பமானதைச் செய்தால், அவனுக்கு செவி சாய்ப்பார். பிறவிக் குருடனுடைய கண்களை ஒருவன் திறந்தானென்று உலகமுண்டானது முதல் கேள்விப்பட்டதேயில்லை. அவர் தேவனிடத்திலிருந்து வராதிருந்தால் ஒன்றும் செய்யமாட்டார் என்றான்.

அதைக் கேட்ட அவர்கள், முழுவதும் பாவத்தில் பிறந்த நீ எங்களுக்கு போதிக்கிறாயோ, என்றுச் சொல்லி, அவனை வெளியே துரத்திவிட்டார்கள். அவனை அவர்கள் வெளியே துரத்திவிட்டதை அறிந்த இயேசு, அவனிடத்தில் வந்து நீ தேவகுமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறாயா? என்றார். அதற்கு அவன்: ஆண்டவரே, அவரிடத்தில் நான் விசுவாசமாயிருக்கும்படிக்கு அவர் யார் என்றான். இயேசு அவனைப் பார்த்து, நீ அவரைக் கண்டிருக்கிறாய். உன்னுடன் பேசுகிறவர் அவர்தான் என்றார். உடனே, அவன் ஆண்டவரே, விசுவாசிக்கிறேன் என்றுச் சொல்லி அவரைப் பணிந்துக்கொண்டான்.

அப்பொழுது, இயேசு காணாதவர்கள் காணும்படியாகவும் காண்கிறவர்கள் குருடராகும்படியாகவும் நியாயத் தீர்ப்புக்கு நான் இந்த உலகத்தில் வந்தேன் என்றார். அவரோடிருந்த பரிசேயர்கள் இவைகளை கேட்டபொழுது, நாங்களும் குருடரோ என்றார்கள். இயேசு அவர்களிடம், நீங்கள் குருடராயிருந்தால் உங்களுக்கு பாவமிராது. நீங்கள் காண்கிறோம் என்று சொல்லுகிறபடியினால் உங்கள் பாவம் நிலை நிற்கிறது என்றார்.

சிறு பிள்ளைகளே! நம்முடைய வாழ்க்கையிலே சூழ்நிலைகள் எப்போதும் ஒரே மாதிரியாக இருக்குமென்று சொல்லிவிடமுடியாது. ஆனால், சூழ்நிலைகள் நமக்கு எதிராக வரும்போது, தேவன் நமக்கு ஆதரவாயிருப்பதை அனுபவப்பூர்வமாய் நாம் அறிந்துக் கொள்ள ஒரு வாய்ப்பு நமக்கு ஏற்படுகிறது. பிறவிக்குருடனை அவர் பார்வையடையச் செய்யும்போது, பரிசேயர்கள் அதை விரும்பவில்லை. அதை தேவன்தான் அனுமதித்தார். ஆனாலும் அவர் என்ன செய்ய நினைத்தாரோ, அதைச் செய்தார். குருடனை பார்வையடையச் செய்தார். பார்வையடைந்த பின்னர் அவன் அவரை விசுவாசித்து அவரைப் பணிந்துக்கொண்டான். அதைத் தான் நம்மிடத்திலும் தேவன் விரும்புகிறார்.

# பிறவிக் குருடன் பார்வை பெறுதல்!

## யோவான் 9ஆம் அதிகாரம்

1) இயேசுவை ரபீ என்று அழைத்தவர்கள் யார்?
2) குருடனிடத்தில் எது வெளிப்படும்பொருட்டு அவன் அப்படிப் பிறந்தான் என்று இயேசு கூறினார்?
3) எப்படிப்பட்ட இராக்காலம் வருமென்று இயேசு கூறினார்?
4) இயேசு எங்கே துப்பி சேறு உண்டாக்கினார்?
5) சீலோவாம் என்பதன் பொருள் என்ன?
6) பார்வையடைந்த குருடனை யாரிடத்திற்குக் கொண்டு போனார்கள்?
7) இயேசு எந்த நாளைக் கைக்கொள்ளவில்லை என்று பரிசேயர் கூறினர்?
8) இயேசுவை யார் தீர்க்கதரிசி என்றான்?
9) பிறவிக் குருடன் பார்வையடைந்ததை நம்பாதவர்கள் யார்?
10) ஜெப ஆலயத்துக்குப் புறம்பாக்கப்படுபவன் யார்?
11) இந்த மனுஷன் பாவி - யாரைக் குறித்து கூறப்பட்டது?
12) தாங்கள் யாருடைய சீஷர் என்று யூதர்கள் கூறினார்கள்?
13) ஒருவன் எப்படியிருந்து, தேவனுக்குச் சித்தமானதைச் செய்தால் அவர் அவனுக்குச் செவிகொடுப்பார்?
14) முழுவதும் பாவத்தில் பிறந்தவன் என்று யூதர்கள் யாரைக் கூறினார்கள்?
15) பிறவிக் குருடன் இயேசுவை எப்படி அழைத்தான்?
16) நீ அவரைக் கண்டிருக்கிறாய் என்று பிறவிக்குருடனிடம் யார் கூறியது?
17) பிறவிக்குருடன் என்ன சொல்லி இயேசுவை பணிந்துக் கொண்டான்?
18) நியாயத் தீர்ப்புக்காக இந்த உலகத்தில் வந்தவர் யார்?
19) நாங்களும் குருடரோ என்றவர்கள் யார்?
20) நீங்கள் குருடராயிருந்தால் உங்களுக்குப் பாவமிராது என்று பரிசேயரிடம் கூறியவர் யார்?

பதில்கள்:

1) சீஷர்கள் (9:2)
2) தேவனுடைய கிரியைகள் (9:3)
3) ஒருவனும் கிரியை செய்யக்கூடாத (9:4)
4) தரையிலே (9:6)
5) அனுப்பப்பட்டவன் (9:7)
6) பரிசேரிடம் (9:13)
7) ஓய்வு நாளைக் கைக்கொள்ளாததினால் (9:16)
8) பார்வையடைந்த பிறவிக் குருடன் (9:17)
9) யூதர்கள் (9:17)
10) இயேசுவை கிறிஸ்து என்று அறிக்கை பண்ணுகிறவன் (9:22)
11) இயேசு (9:24)
12) மோசே (9:28)
13) தேவபக்தியுள்ளவனாய் (9:31)
14) பிறவிக்குருடனை (9:34)
15) ஆண்டவரே (9:36)
16) இயேசு (9:37)
17) ஆண்டவரே விசுவாசிக்கிறேன் (9:38)
18) இயேசு (9:39)
19) பரிசேயரில் சிலர் (9:40)
20) இயேசு (9:41)

# கருங்கல்லிலும் நார் உரிக்கலாம்!

''இரட்சிக்கக்கூடாதபடிக்குக் கர்த்தருடைய கை குறுகிப்போகவில்லை.'' (ஏசாயா 59:1)

மங்கோலியாவின் கடற்கரைப் பட்டணம் டீன்ஸ்டின். அங்கு பெய்ய வேண்டிய மழை பெய்யாமல் கடும் வறட்சி ஏற்பட்டது. அதற்கு காரணம் அங்குள்ள மிஷனரிகளே என்றுச் சொல்லி ஒரே நாளில் 13 மிஷனரிகளை படுகொலை செய்தார்கள், அங்குள்ள மக்கள். இந்த கொந்தளிப்பான சூழ்நிலையில் அங்கு மிஷனரியாகச் சென்றார் ஸ்காட்லாந்து தேசத்தைச் சேர்ந்த ஜில்மோர். ஒரு தனி மனிதனால் கிட்டவே நெருங்க முடியாத முரட்டாட்டமான ஜனங்கள் அவர்கள். இந்த மங்கோலியாவில் புத்தமார்க்கம் தனது கால்களை ஊன்றியிருந்தது. ஆண்களில் பாதிப்பேர் புத்த லாமாக்களாக இருந்தனர். அவர்கள் வாழ்கின்ற கூடாரத்தின் உச்சியில் புத்தமார்க்க கொடிகள் பறக்கும். சாப்பிடும் முன் அதில் கொஞ்சம் எடுத்து எரியும் அக்கினியில் போட்டு கடவுளுக்கு படைத்த பின்பே சாப்பிடுவார்கள். இப்படி அசாதாரணமான பக்தி கொண்டவர்கள் மத்தியில் நான்கு ஆண்டுகள் மிகக்கடினமான மிஷனரிப் பணி செய்தார் ஜில் மோர்.

ஆனால், ஒரு ஆத்துமாவைக்கூட அவரால் கிறிஸ்துவண்டை வழிநடத்த முடியவில்லை. சுவிசேஷத்தின் தேவையைக் குறித்து ஒருவரும் ஆர்வம் காட்டவில்லை. அவர்கள் மத்தியில் கர்த்தருடைய ஊழியத்தைச் செய்வது என்பது கருங்கல்லில் நார் உரிப்பது போன்ற மிகக் கடினமான காரியமாகவே இருந்தது. எனவே தேவஒத்தாசையைக்கொண்டும், தனது அயராத உழைப்பு, ஆத்தும பாரம், இடைவிடாத ஜெபங்கள், ஓயாத கண்ணீரோடு அந்தக் கடினமான புத்தமார்க்க மங்கோலியர்களை கர்த்தரண்டை ஜில்மோர் வழிநடத்தினார். தனி நபர்களுக்கு சுவிசேஷம் அறிவித்து, ஒவ்வொருவரையும் விசுவாசத்திற்குள் கொண்டு வந்தார். கடினமான அவர்களின் இருதயங்கள் கொஞ்சம் கொஞ்சமாய் கிறிஸ்துவின் அன்புக்கு நேராக திருப்பப்பட்டன. மங்கோலிய மக்கள் அவரை ''எங்கள் ஜில்மோர்'' என ஆனந்தமாய் அழைத்தனர். எதிர்பாராத விதத்தில் அவரது மரணம் நேர்ந்த போது, இந்தக் கல் கூட கரையுமா என்பது போல இருந்த கடின இருதயங்கள் கூட கண்ணீர் விட்டு அழுதன. அடக்க ஆராதனைக்கு மேல் நாட்டு மிஷனரிகள் வந்த போதும், மங்கோலியர்களே பிரேதப் பெட்டியை தூக்கிச் சென்று அடக்கம் செய்தனர். கருங்கல்லிலும் நார் உரித்துவிட்டார் ஜில் மோர்.

பெற்றோர்களே! உங்கள் உள்ளத்தை சுக்கு நூறாக உடைத்து நொறுக்கும் துஷ்டனாக உங்கள் பிள்ளைகள் இருக்கிறார்களோ? அவர்களின் இரட்சிப்பிற்காக ஏக்கத்தோடு ஜெபித்துக்கொண்டிருக்கிறீர்களோ? எதுவும் நடக்கவில்லையே எனச் சோர்ந்து போயிருக்கிறீர்களோ? அவர்களுடைய முரட்டாட்டத்தையும், கடின இருதயத்தையும், தேவ பயமற்ற நடத்தையும் கண்டு மனம் நொந்து காணப்படுகிறீர்களோ? கண்ணீரே உங்களுக்கு உணவாயிற்றோ? கலங்காதீர்கள். கல்லான இருதயத்தையும் கர்த்தர் உடைக்க ஒரு நாளை முன் குறித்திருக்கிறார். இரட்சிப்பு கர்த்தருடையது. இரட்சிக்கக்கூடாதபடிக்கு அவருடைய கை குறுகிப் போகவில்லை. புத்த மதத்தில் பயங்கர பக்தியும் வைராக்கியமுள்ள மங்கோலியர்களின் மனதை மாற்றிய தேவனால், இரட்சிக்கப்படாத, உங்கள் பிள்ளைகளையும், குடும்பத்தையும் இரட்சிக்க முடியும். ஆகவே, சோர்ந்து போகாமல் ஜெபியுங்கள். கர்த்தர் அற்புதம் செய்வார்.

# பொய்யான ஒன்றை நிஜமாக மாற்ற நினையாதே!

யாக்கோபு தன் வாழ்நாளில் செய்த மிகப்பெரிய தவறு, தன் அண்ணனைப் போல வேடமணிந்து கண்தெரியாத தன் தந்தையிடம் வஞ்சகமாய் ஆசீர்வாதம் பெற்றது. அதற்க்கான தண்டனையை அவன் பின் நாளில் அனுபவித்தான் என்று நாம் அறிந்திருக்கிறோம். ஆக, என்றும் உண்மையாய் இருப்போம். பொய்யைத் தவிர்ப்போம். மெய்யான ஆசீர்வாதம் பெறுவோம்.

ஒரு சமயம், ஒரு அமெரிக்கன், ரஷ்யன், இந்தியன், மூவருக்கும் ஒரு போட்டி வைக்கப்பட்டது. காட்டிற்குள் நுழைந்து ஒரு சிங்கத்தைச் வேட்டையாடி வரவேண்டும். யார் சீக்கிரமாக வருகிறார்கள் என்பதுதான் போட்டி. முதலாவது, அமெரிக்கன் காட்டிற்குள் நுழைந்து, ஒரு மணி நேரத்தில் சிங்கத்தை சுட்டு வீழ்த்தி அதைத் தோளில் தூக்கிப்போட்டுக் கொண்டு வந்தான். அடுத்ததாக, அந்த ரஷ்யன் 2 மணி நேரத்தில் ஒரு சிங்கத்தை சுட்டு வீழ்த்தி தன் தோளின் மீது சுமந்துக்கொண்டு வந்தான். இப்போது. இந்தியன் காட்டிற்குள் சென்றான். ஆனால், வெகு நேரமாகியும், அந்த இந்தியன் திரும்பி வரவில்லை. இந்த இரண்டு பேருக்கும் பயம் வந்துவிட்டது. அவருக்கு என்னவாயிற்று என்றுச் சொல்லி காட்டிற்குள் தேடச் சென்றபோது அவர்களுக்கு அங்கே ஒரு பெரிய அதிர்ச்சி காத்துக்கொண்டிருந்தது. அந்த இந்தியன் ஒரு மரத்தில் ஒரு கரடியை கட்டி வைத்து அதை அடித்துக்கொண்டிருந்தான். கிட்டே சென்று பார்த்த போது, அவன் அந்தக் கரடியைப் பார்த்து ‘‘உன்னை சிங்கம் என்று ஒத்துக்கொள்’’ என சொல்லிக்கொண்டே அந்தக் கரடியை அடித்துக்கொண்டிருந்தான் அந்த இந்தியன்.

மனிதர்களாகிய நாமும் கூட இன்றைக்கு ஒரு பொய்யை உண்மையாக மாற்ற நினைக்கிறோம். அதற்காக இன்னும் அநேக பொய்களைச் சொல்ல முயற்சிக்கிறோம். உள்ளதை உள்ளதென்றும், இல்லதை இல்லதென்றும் சொல்லுங்கள், இதற்கு மிஞ்சினது தீமையினால் உண்டாயிருக்கும் என்று மலைப்பிரசங்கத்தில் இயேசு சொன்னார். (மத். 5:37).

பிள்ளைகளே! பொய்யை நிஜமாக்க முயற்சி பண்ண வேண்டாம். நிஜம் தானாக நிஜமாகும்போது, நீ நிஜமாக்கிய பொய் உன்னை பழிவாங்கும்.



# அப்போஸ்தலனாகிய யோவான்!



''அப்பொழுது, அவர் தம்முடைய 12 சீஷர்களையும் தம்மிடத்தில் வரவழைத்து அசுத்த ஆவிகளைத் துறத்தவும், சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கவும் அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார். அந்தப் பன்னிரண்டு அப்போஸ்தலருடைய நாமங்களாவன: முந்தினவன் பேருது என்னப்பட்ட சீமோன், அவன் சகோதரன் அந்திரேயா செபெதேயுவின் குமாரன் யாக்கோபு, அவன் சகோதரன் யோவான்'' (மத்தேயு 10:1,2).

''யோவான்'' என்ற வார்த்தைக்கு ''கர்த்தரின் வெகுமதி'' அல்லது ''கர்த்தரின் கிருபை'' என்பது அர்த்தமாகும். பழைய ஏற்பாட்டில் யோவான் என்ற பெயரை பார்க்க முடியாது. புதிய ஏற்பாட்டில் ''யோவான் என்று அழைக்கப்பட்ட மூன்று நபர்கள் உண்டு. 1) ஸ்நானகனான யோவான் 2) சீஷனும், அப்போஸ்தலனுமாயிருந்த யோவான். இவர்தான் யோவான் சுவிசேஷத்தையும், 1 யோவான், 2 யோவான், 3 யோவான் நிருபங்களையும், வெளிப்படுத்தின விசேஷத்தையும் எழுதினவர். 3) சுவிசேஷகனான மாற்குவின், எபிரேய பெயர் யோவான் என்பதாகும். இவர் பிரதான ஆசாரியனாகிய அன்னாவின் இனத்தான்.

அப். யோவானின் தகப்பனின் பெயர் செபெதேயு, அவர் பெத்சாயிதா பட்டணத்தான். தாயின் பெயர் சலோமி. இந்த சலோமி இயேசுவின் தாயாகிய மரியாளின் உடன் பிறந்தவள் என்று அறிஞர்கள் எண்ணுகிறார்கள். அவர்களின் இரண்டு குமாரர்கள்தான் யாக்கோபும், யோவானும். இந்தக் குடும்பத்தார் கலிலேயாக் கடலிலே மீன் பிடிக்கிற தொழிலை செய்தவர்கள். சீமோனும் அவரது சகோதரன் அந்திரேயாவும் கடலில் வலை போட்டுக்கொண்டிருக்கிறபோதுதான் இயேசு அவர்களைக் கண்டு என் பின்னே வாருங்கள், உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன் என்றார். அதேபோல, யாக்கோபும், யோவானும் வலைகளை பழுது பார்த்துக்கொண்டிக்கும்போது, அவர்களை இயேசு அழைத்தார். இந்த நான்கு பேரும் மீன்பிடித் தொழிலில் கூட்டாளிகளும், பங்காளிகளாகவும் இருந்தார்கள்.

கர்த்தர் சுறுசுறுப்பானவர்களைத்தான் அழைக்கிறார். வேலையில் கவனமும், ஜாக்கிரதையும் உள்ளவர்களை அவருடைய கவனம் கவருகிறது. ஓட்டை வலையில் மீன் தங்காது. ஓட்டையுள்ள வாழ்க்கையில் ஆவிக்குரிய ஆசீர்வாதம் தங்காது. ஆகவே

ஓட்டைகளை பழுது பார்த்து சரி செய்து வையுங்கள். எலியா பலிபீடத்தைப் பழுது பார்த்தார், செப்பனிட்டார். கர்த்தருடைய அக்கினி பலிபீடத்தின் மேல் இறங்கினது.

யோவான், ஒரு நாள் யோவான் ஸ்நானகனுடைய சாட்சியைக் கேட்டு இயேசுவை சந்தித்து இயேசுவின் சீஷனாய் மாறினார். இயேசு மற்ற சீஷர்களைப் பார்க்கிலும், யோவான் மேல் மிகவும் அன்புடையவராயிருந்தார். யோவானும் கிறிஸ்துவை மிக அதிகமாக நேசித்தார். அவருக்கு ''அன்பின் சீஷன்'' என்ற பெயரும் கொடுக்கபட்டது. அப். யோவான் திருமணம் ஆகாதவர் என்று வேத பண்டிதர்கள் கருதுகிறார்கள். இயசேுவுக்கு மிகவும் நெருக்கமாய் இருந்த மூன்று சீடர்கள் யோவான், பேதுரு, யாக்கோபு ஆவார்கள். யவீருவின் மகளை உயிரோடு எழும்பின நேரத்திலும், இயேசு மறுரூப மலைக்குச் சென்ற நேரத்திலும், பேதுருவின் மாமியைக் குணமாக்கின நேரத்திலும், தேவாலயத்தின் அழிவை முன் அறிவித்த சந்தர்ப்பத்திலும், கெத்செமனே தோட்டத்தில் வியாகுலம் அடைந்த சமயத்திலும் யோவான் இயேசுவோடு கூட இருந்தார். இயேசு யோவானுக்கும், யாக்கோபுக்கும் சேர்த்து ''பொவனெர்கேஸ்'' என்று பெயரிட்டார். அதற்கு ''இடிமுழக்கத்தின் மக்கள்'' என்பது அர்த்தமாகும்.

யாக்கோபைப் போலவே, யோவான் ஆரம்ப காலத்தில், சகிப்புத் தன்மையற்றவராகவும் வைராக்கியம் உள்ளவராகவும், உணர்ச்சிவசப்படுகிறவராகவும் இருந்தார். சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ளாத சமாரியாவிலுள்ள ஜனங்களை அழிக்கும்படி வானத்திலிருந்து அக்கினியை இறங்கச் செய்யட்டுமா என்று இயேசுவிடம் கேட்டார். மேலும், கிறிஸ்து தம்முடைய ராஜ்ஜியத்திலே வரும்போது, அவருடைய பக்கத்திலே அமரும் இடத்தைத் தேடினவர்களில் இவரும் ஒருவர். யோவான், தான் எழுதிய சுவிசேஷங்களிலே தன்னைக் குறித்து எழும்போது, ''இயேசுவுக்கு அன்பான சீஷன்'' என்றே குறிப்பிட்டு எழுதினார்.

யோவானுடைய பரிசுத்தம், தேவ அன்பு, பக்தி வைராக்கியம், அவருடைய போதனைகள், சிறந்த வாழ்க்கை முறைகள் எல்லாம் நம்முடைய உள்ளத்தை மிகவும் கவருகின்றன. ஆரம்ப நாட்களில் இந்த யோவான் மிகவும் துடுக்குள்ளவராயிருந்தாலும், பிற்காலத்தில் மிகவும் அமைதியுள்ளவராக, பொறுமையுள்ளவராக, தன்னை மறைத்துக்கொண்டு கிறிஸ்துவை உயர்த்தி செயல்பட்டதைக் காணலாம். அவருடைய உள்ளத்தில் தேவ அன்பு ஊற்றப்பட்டிருந்தது என்பதை அவரது சுவிசேஷத்திலும், நிருபங்களிலும் வாசித்து அறியலாம். இயேசு கிறிஸ்துவை மிகவும் அளவில்லாமல் நேசித்ததினால் ''இயேசுவுக்கு அன்பாயிருந்த சீஷன்'' என்று அழைக்கப்பட்டார். யோவான் ஒரு போதும் தேவ அன்பிலிருந்து விலகிப் போகவுமில்லை, பின்வாங்கவுமில்லை. அந்த அன்பை மறுதலிக்கவும் இல்லை. கடைசிவரை சிலுவையண்டை நின்றுக் கொண்டிருந்தார். பரிசேயர், சதுசேயர், ரோம அரசாங்கத்தைப் பற்றியோ பயப்படவில்லை. யோவான் தாழ்மையுள்ளம் கொண்ட சீஷனாகவும் இருந்தார். அவர் எழுதிய யோவான் நற்செய்தி சுவிசேஷத்தில் தன்னுடைய பெயரைக் குறிப்பிடாமல், அதற்குப் பதிலாக ''மற்ற ஒரு சீஷன், அன்பான சீஷன்'' என்ற அடைமொழியைக் காணலாம்.

யோவான் எழுதிய ஐந்து புத்தகங்களிலே ''அன்பு'' என்ற வார்த்தை ஏறக்குடைய 80 முறையும், ''சாட்சி'' என்ற வார்த்தை 70 தடவையும் திரும்பத் திரும்ப வருகின்றன. தேவனுடைய அன்புக்கு அவர் சாட்சியாக விளங்கினார். யூதர்கள் இயேசுவைப் பிடித்தபோது, பெரும்பாலான சீஷர்கள் உயிருக்கு பயந்து எங்கோ ஓடிப்போய் ஒளிந்துக்



கொண்டார்கள். ஆனால், யோவான் கடைசி வரை இயேசுவின் பின் சென்றார். இயேசு சிலுவையில் அறையப்பட்ட காட்சியை கண்ணாரக் கண்டார்.

யோவானின் வாழ்க்கை ஒரு சாட்சியான வாழ்க்கை. கிறிஸ்து செய்த அற்புதங்களைக் குறித்து சாட்சி கொடுத்தார். யோவான் தான் என்ன போதித்தாரோ அதன்படியே வாழ்ந்துக்காட்டினார். வாய் பேசினபடி அவரது வாழ்க்கையும் பேசினது. இயேசு சிலுவையில் மரிக்கும்போது, தனது தாயாரை இந்த யோவானிடம் ஒப்படைத்தார். பிற்காலத்தில் யோவான் எருசலேம் சபைக்கும், அதற்கு பின்பாக எபேசு சபைக்கும் பொறுப்பாளராக ஊழியம் செய்தார். ரோமப் பேரரசன் யோவானை பல விதங்களிலே சித்திரவதை செய்தான். அந்த சித்திரவதையிலே இயேசுவை அவர் மறுதலியாததினாலே, பெரிய கொப்பரையில் எண்ணெயைக் கொதிக்க வைத்து அந்த எண்ணெய்ச் சட்டிக்குள் அவரைத் தூக்கிப் போட்டார்கள். ஆனாலும் அவர் சாகாமல் அந்த கொதிக்கும் எண்ணெய் சட்டியிலிருந்து நீந்தி வெளியே வந்துவிட்டார். யூதர்கள் ரோம அரசனுக்கு கீழ்ப்படியாததினாலே ரோம சக்கரவர்த்தி ஒரு ஆணை பிறப்பித்தான். ஒவ்வொரு யூதர்களும் வருஷத்திற்கு ஒரு முறை ரோம நீதியரசருக்கு முன்பாக நின்று எரிகிற நெருப்பிலே சத்தியம் செய்து, ''ரோமாபுரி சக்கரவத்தியே ஆண்டவர்'' என்று அறிக்கையிடவேண்டும். இப்படிச் சொல்லுவதின் மூலம், அந்த யூதன் ரோம அரசாட்சியை ஏற்றுக்கொண்டு அதற்கு அடிபணிகிறான் என்று அர்த்தமாகும். ஆனால், யோவானோ மிகவும் தைரியமாக ''ரோம சக்கரவர்த்தி ஆண்டவரல்ல, இயேசுவே ஆண்டவர்'' என்றார். ஆகவே ரோம அரசு அவரை பத்மு தீவுக்கு நாடு கடத்தப்பட்டார். இந்த பத்மு தீவிலேத்தான் யோவான் வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தை எழுதினார். அவருடைய பிரதான உபதேசமே, ''சிறு பிள்ளைகளே ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்'' என்பதாகும்.



இயேசுவினுடைய பன்னிரண்டு சீஷர்களில் பதினோரு பேர் இரத்த சாட்சிகளாக மரித்தார்கள். ஆனால் இந்த சீஷனுடைய மரணத்தைக்குறித்து சரித்திரத்திலே ஒன்றுமே தெரியவில்லை. இவர் மற்ற எல்லா சீஷர்களைக் காட்டிலும் நீண்ட காலம் வாழ்ந்தவர். இயேசு கிறிஸ்துவுக்கு 12 சீஷர்கள் இருந்தாலும் கூட, ''அன்பாயிருந்த சீஷன்'' இந்த யோவான் மாத்திரமே. பிள்ளைகளே! நீங்களும் உங்களுடைய வாழ்க்கையிலே முதல் அன்பையும், முழு அன்பையும் கர்த்தருக்கு கொடுக்கும்போது அவர் உங்களை உன்னத நிலைமைக்கு கொண்டுச் செல்வார். இப்போதே யோவானைப் போல கர்த்தருடைய மார்பிலே சாய்ந்துக்கொள்ளுங்கள்.



# அப்போஸ்தலனாகிய யோவான்!

**இந்த கட்டுரையைப் படித்துவிட்டு கீழ்க்கண்ட கேள்விகளுக்கு விடையளியுங்கள்.**

1. யோவான் என்ற வார்த்தைக்கு என்ன அர்த்தம்?
2. யோவானின் தகப்பனார் மற்றும் தாயின் பெயரென்ன?
3. யோவான் குடும்பத்தாரின் தொழில் என்ன?
4. யோவான் யாருடைய சாட்சியைக் கேட்டு இயேசுவின் சீடரானார்?
5. யோவானுக்கு என்ன பெயர் கொடுக்கப்பட்டது?
6. யோவான் எந்த அரசாங்கத்திற்கு பயப்படவில்லை?
7. யோவான் எழுதிய ஐந்து புத்தகங்களிலே அன்பு, சாட்சி என்ற வார்த்தைகள் எத்தனை முறை வருகிறது?
8. இயேசு தனது தாயாரை யாரிடம் ஒப்படைத்தார்?
9. ரோம அரசு யோவானை எந்த தீவுக்கு நாடு கடத்தியது?
10. யோவான் எங்கு வெளி. விசேஷத்தை எழுதினார்?

விடைகள் 23ஆம் பக்கம் பார்க்கவும்

# உடல் நலம் காக்க உதவும் காய்கறிகள்!

# கேரட் (CARROT)



**கேரட்** உலகம் முழுவதும் மிகவும் பிரபலமான ஒரு காய்கறியாகும். அதிக ஊட்டச் சத்தினைக் கொண்டுள்ளது. நல்ல வடிவம், அடர்ந்த நிறம், இனிப்பான சுவை, மென்மையான மேல் பகுதி, நார்குறைவு போன்ற தன்மைகள் கொண்ட கேரட்களையே பெரும்பாலும் மக்கள் விரும்புகிறார்கள். கேரட்டில் பல ரகங்கள் இருந்தாலும் இதனை பொதுவாக ஆசிய வகை, ஐரோப்பிய வகை என இரண்டாகப் பிரிக்கிறார்கள்.

## தோற்றம்

ஆரம்பக் காலத்தில் தோன்றிய காட்டுக் கேரட்டுகள் இன்றைக்கும் ஐரோப்பா, மேற்கத்திய ஆசியா, ஆப்கானிஸ்தான், டர்கி போன்ற நாடுகளில் காணப்படுகிறது. தொல் பொருள் ஆராய்ச்சியாளர்கள் இதன் விதையைச் சுவிட்சர்லாந்து நாட்டில் PRE-HISTORIC காலத்தில், ஏரியைத் தோண்டும் போது கண்டு பிடித்துள்ளனர். இதன் தாயகம் மத்திய ஆசியப் பகுதியாகும்.

சில வரலாற்று ஆசிரியர்கள் கேரட்டின் தாயகம் ஆப்கானிஸ்தான் என்கிறார்கள். ஏனெனில் இங்கு ஊதா கலந்த சிவப்பு மற்றும் அடர்ந்த நிறம் கொண்ட சிவப்புக் கேரட்டுகள் இயற்கையாகவே காட்டுப் பகுதிகளில் வளர்ந்து வருகின்றன. சுமார் 2800 ஆண்டுகளுக்கு முன்பே பாபிலோன் தோட்டத்தில் இதனைப் பயிரிட்டுள்ளனர். பாபிலோனியர்கள் இந்தக் கேரட்டு இலையின் வாசனை மற்றும் விதையின் வாசனைக்காகவே பயிரிட்டுள்ளனர். மேலும் கேரட்டின் வேர்களையும் சாப்பிட்டனர்.

முதலாம் நூற்றாண்டில் கிரேக்கர்கள் வெங்காயம், லீக், முள்ளங்கி, டர்னிப், போன்றவற்றைப் பயிரிட்டனர். இத்துடன் கேரட்டுகளையும் பயிரிட்டனர். இது சுவையற்றதாக இருந்தால் மிகக்குறைந்த அளவே பயிரிட்டனர். இவர்கள் சமையலுக்குப் பயன்படுத்தவில்லை. மருத்துவ உபயோகத்திற்காகவே பயிரிட்டனர். 8ம் நூற்றாண்டில் பிரான்ஸ் நாட்டை ஆட்சி புரிந்த கார்ல் மாக்னி என்கிற அரசர் புதிய புதிய காய்கறிகள், பழங்கள் ஆகியவற்றைத் தனது தோட்டத்தில் பயிரிடுவதில் ஆர்வம் காட்டி வந்தார். இங்கு கேரட்டும் பயிரிடப்பட்டது. ஆனால், கேரட் சுவை கொண்டதாக இல்லாமல்தான் இருந்தது.

பல நூற்றாண்டுகள் கடந்தன. 12ம் நூற்றாண்டில் கேரட்டில் பல புதிய மாற்றங்கள் ஏற்பட்டன. இந்தக் காலத்தில் இது மெடிட்டேரியன் பகுதிக்குச் சென்றது. 12ம் நூற்றாண்டில் வாழ்ந்த அரபிய நாட்டு எழுத்தாளர் இபின் அல் அலாம் இரண்டு வகையான கேரட்டுகள் இருப்பதைக் குறிப்பிட்டுள்ளார். சிவப்பு வகை மற்றும் மஞ்சள் வகை கேரட்டுகள் பற்றி எழுதியுள்ளார். சிவப்பு வகை சுவையானதும், சாறு நிறைந்ததாகவும் உள்ளது. மஞ்சள் மற்றும் பச்சை நிறம் கொண்ட மற்றொரு வகை கேரட்டானது கரடு முரடாகவும், மட்டமான வாசனை கொண்டதாகவும் இருந்தது. அரேபிய பயணிகள் மூலம் இது ஐரோப்பா

கண்டத்திற்குக் கொண்டு செல்லப்பட்டது. ஐரோப்பிய பயணிகள் 14ம் நூற்றாண்டில் நெதர்லாந்து, பிரான்ஸ், ஜெர்மனி போன்ற நாடுகளில் பயிரிடத்தொடங்கினர்.

கொலம்பஸ் 1492ல் முதன் முதலில் கரிபியன் தீவுகளுக்கு சென்றார். அதன் பின்னர் கேரட்டு உலகின் பலப்பகுதிக்கும் செல்லத் தொடங்கியது. 1600ம் ஆண்டில் மாலத்தீவுகளில் பயிரிடப்பட்டது. 1565ம் ஆண்டு வெனிசுலா தீவு கண்டு பிடிக்கப்பட்டது. அங்கு ஐரோப்பியர்களால் பயிரிடப்பட்ட கேரட்டுகள் இன்றைக்கும் காணப்படுகின்றன. 1800 ஆண்டுகளில் ஆங்கிலேயர்கள் ஆஸ்திரேலியா சென்றனர். அப்போது கேரட்டுகளையும் எடுத்துச் சென்று அங்கு அறிமுகம் செய்தனர். அமெரிக்காவிற்கு கேரட் சென்றிருந்தாலும், முதலாம் உலக யுத்தத்தின் போது அமெரிக்கர்கள் ஐரோப்பிய பகுதியில் தங்கியபோது காரட்டுகளைச் சாப்பிட்டனர். அப்போது ஏற்பட்ட பழக்கத்தில் தங்கள் நாடுகளில் கேரட்டுகளை அதிக அளவில் பயிரிட்டினர். இதன் பின்னரே அமெரிக்காவில் இது வியாபாரப் பயிராக மாறியது.

### உணவு மதிப்பு

கேரட்டில் வைட்டமின் ஏ சத்து மிகவும் அதிகம் உள்ளது. இதில் உள்ள கரோட்டின் ஆனது நமது கல்லீரலில் வைட்டமின் ஏ யாக மாறுகிறது. இதனை நமது உடல் சேமித்து வைக்கிறது.

### மருத்துவப் பயன்கள்

ரோமன் நாட்டு அரசரான நீரோ அவர்களின் இராணுவத்தில் மருத்துவர்கள் மற்றும் அறுவை சிகிச்சை நிபுணர்கள் கேன்சர் கட்டிகளுக்கு கேரட்டை மருந்தாக பயன்படுத்தினர். காட்டுக் கேரட்டின் விதைகளைப் பித்த நீர் பை தொற்றுகளுக்கும் கொடுத்தார்கள். விஷமுள்ள பாம்புகடிக்கு முதல் உதவியாகவும் இதைக் கொடுத்தார்கள். கேரட் விதையைக் கருக்கலைப்பிற்கும் பயன்படுத்துகிறார்கள்.

கேரட் சாற்றை மிகவும் அற்புதமான சாறு (MIRACLE JUICE) என்று வர்ணிக்கிறார்கள். குழந்தைகளுக்குத் தேவையான ஊட்டச்சத்து கேரட்டில் உள்ளது. உலர்ந்து வறண்டுப் போன தோலை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டு வரும் தன்மை இதற்கு உண்டு. கேரட் சாற்றை அதிகம் எடுத்துக் கொள்வது நல்லதல்ல. ஏனெனில் இதிலுள்ள மஞ்சள் நிறம் காமாலை உருவாகக் காரணமாக உள்ளது. சிலருக்கு அதிகப்படியான கேரட் சாற்றைச் சாப்பிடுவதின் மூலம் குறுகிய காலத்திலேயே தோல் மஞ்சள் நிறமாக மாறிவிடுகிறது. ஆனாலும், விரைவில் மறைந்து விடும். ஆகவே, ஒரு சிலர் மிகுந்த பேராசையுடன் தங்கள் தோல் மஞ்சள் நிறமாக மாற வேண்டும் என்பதற்காக இதன் சாற்றைக் குடிப்பதால், உடல் நலம் கெட்டு நோயாளிகளாக மாறுகின்றார்கள். வைட்டமின் ஏ வேண்டி 1974ல் பேஸில் ப்ரவுன் என்பவர் 10 காலன்கள் கேரட் சாற்றை 10 நாட்களில் 10,000 முறை எடுத்துக் கொண்டார். அதனால் அவர் உடல் அடர்ந்த மஞ்சள் நிறமாக மாறியது. அவரின் கல்லீரல் பாதிக்கப்பட்டு இறந்தார்.

கேரட் வயிறு சம்பந்தப்பட்ட நோய்களுக்கு டானிக்காக கொடுக்கிறார்கள். கேரட் கண் கோளாறைச் சரி செய்கிறது. இதில் அதிகமான வைட்டமின் ஏ உள்ளதால், இது கண் பார்வையை அதிகப்படுத்துகிறது. கண் நோய்களிலிருந்து பாதுகாக்கிறது. இரண்டாம் உலக யுத்தத்தின் போது, ராயல் விமானப் படை வீரர்களை அவசியம் கேரட் சாப்பிடும்படி உத்தரவிட்டனர். தினமும் இரண்டு கேரட்டுகளைச் சாப்பிட்டால் கொழுப்பின் அளவு சுமார்

20 சதவீதம் குறைகிறது. இதற்குக் காரணம் கேரட்டில் உள்ள கரையும் தன்மையுள்ள நாரில் கால்சியம் பெக்டேட் உள்ளது. கேரட்டில் தற்போது பீட்டா கரோட்டின். உள்ளது. இதில் போதிய அளவு வைட்டமின் ஏ உள்ளது. மேலும் இது கேன்சரில் இருந்து பாதுகாக்கவும் கொழுப்பைக் குறைக்கவும் உதவுகிறது. உணவு சாப்பிட்டவுடன் கேரட்டை மெதுவாக மென்றால் வாயில் உள்ள நுண்கிருமிகளை அழிக்கிறது. பல்லைச் சுத்தம் செய்வதோடு ஈறுகளில் ரத்தக்கசிவு மற்றும் பற்கள் சொத்தை யாவதைத் தடுக்கிறது.

### இதரப் பயன்கள்

இதனைப் பச்சையாகச் சாலட்டாக, வேக வைத்து உண்ணலாம். சூப் மற்றும் குளிர்பானம் தயாரிக்கலாம். கேரட்டைக் கொண்டு, பல இனிப்பு வகைகள் தயாரிக்கப்படுகின்றன. கேக், அல்வா, பிட்டு போன்றவையும் தயாரிக்கிறார்கள். இரண்டாம் உலக யுத்ததத்திற்குப் பிறகு கேரட் கேக்குகளை கிறிஸ்துமஸ் விழாக்களில் பயன்படுத்துகிறார்கள். கேரட்டைப் பச்சையாகச் சாப்பிடுவதால் உடலுக்கு சத்து அதிகமாக கிடைக்கிறது. வேக வைத்து சாப்பிடும் போது, அதில் உள்ள வைட்டமின்கள் அழிந்துவிடுகின்றன.

பிள்ளைகளே! உங்கள் மம்மியிடம் சொல்லி கேரட் சூப், கேரட் ஜூஸ், கேரட் கேக் மற்றும் கேரட் அல்லா செய்யச் சொல்லிச் சாப்பிடுங்கள். அது உங்கள் உடலுக்கு நல்லதே செய்யும். ஆனாலும், அளவாக சாப்பிட்டு வளமாக வாழுங்கள்.

## தாயின் உள்ளத்தை சந்தோஷப்படுத்துங்கள்!

ஒரு தாய் தன் சின்ன மகளுக்கு இரண்டு மாம்பழங்களை உண்ணக் கொடுத்தாள். மகள் சந்தோஷமாக சாப்பிட ஆரம்பித்தபோது, தாய் மகளிடம் ‘‘அம்மாவிற்கு ஒரு பழம் தருவாயா?’’ என்று கேட்டாள். அந்த நேரத்தில் அந்த மகள் மிகவும் ஆசையோடு ஒரு பழத்தைக் கடித்து சுவைக்க ஆரம்பித்தாள். அம்மா, தன்னிடம் பழத்தைக் கேட்டபொழுது, அந்த மகள் ஏற்கனவே கடித்த பழத்தை தன் மடியில் வைத்துவிட்டு, அடுத்த பழத்தைக் கடித்து சுவைக்க ஆரம்பித்து விட்டாள். உடனே, தாய்க்கு மிகவும் ஏமாற்றம் ஏற்பட்டது. ஆனால், அந்த மகள் கொஞ்சம் கூட கவலைப்படாமல், இரண்டு மாம்பழங்களையும் மாறி மாறி கடித்து சுவைப்பார்த்து விட்டு, இரண்டாவது பழத்தை தன் தாய்க்கு நேராக நீட்டி, அம்மா இதைச் சாப்பிடு, இதுதான் அதிக ருசியாக இருக்கிறது என்றாள். தாயின் கண்களில் ஆனந்தக் கண்ணீர் பொங்கி வந்தது. அந்த தாயோ தனது மகள் ஒரு பழத்தை தருவாள் என எதிர்பார்த்திருக்க, அவளோ மிகவும் அதிக ருசியுள்ள பழத்தை கொடுத்தது, எத்தனை பெரிய அன்பு பாருங்கள்.



பிள்ளைகளே! உங்களைப் பெற்றெடுத்த தாய் உங்களைக் குறித்து சந்தோஷப்படும்படி சிறப்பானதைக் கொடுங்கள். அப்பொதெல்லாம் நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டுக் கொண்டே இருப்பீர்கள். உங்களைப் பெற்றவள் மகிழ்வாள் (நீதி 23:25).

# பொது அறிவு கேள்வி - பதில்கள் !

## (GENERAL KNOWLEDGE QUESTION & ANSWERS)

1. நமது தேசியக் கொடியில் இடம் பெற்றுள்ள அசோக சக்கரம் எந்த நிறத்தில் உள்ளது ?
2. ராஜ்ஜிய சபை உறுப்பினர்களின் பதவிக்காலம் எத்தனை ஆண்டுகள் தெரியுமா ?
3. ஒரு சதுர மைல் என்பது எத்தனை ஏக்கர் ?
4. காளைச் சண்டை எந்த நாட்டின் தேசிய விளையாட்டு ?
5. கரையான் அரிக்காத ஒரே மரம் எது ?
6. காற்றின் வேகத்தை எந்தக் கருவியின் உதவியால் அளக்கிறார்கள் ?
7. தமிழ் நாட்டின் அரசுச் சின்னமாக உள்ள மரம் எது ?
8. டிப்தீரியா நோய் உடலின் எந்த பாகத்தை தாக்குகிறது ?
9. தமிழ் நாட்டில் மக்கள் தொகை குறைவாக உள்ள மாவட்டம் எது ?
10. BLUE HOUSE என்பது எந்த நாட்டின் ஜனாதிபதி மாளிகையின் பெயர் ?
11. தொடர்ந்து நான்கு முறை அமெரிக்க அதிபராகத் தோந்தெடுக்கப்பட்டவர் யார் ?
12. சோடாவை உடைக்கும் போது நுரை முட்டைகள் எதன் காரணமாக தோன்றுகின்றனர் ?
13. மிகவும் அதிகமாக பத்திரிக்கைகள் வெளியாகும் நாடு எது ?
14. உலகில் அதிகமானவர்களை வாட்டும் பொது நோய் எது ?
15. ''சால்வேஷன் ஆர்மி'' என்னும் அமைப்பு தொடங்கியவர் யார் ?
16. யூதர்கள் புனிதமாகப் போற்றும் நூல் எது ?
17. உலகிலேயே மிகப்பெரிய தேவாலயம் எங்குள்ளது தெரியுமா ?
18. தமிழ்நாட்டில் ஆங்கிலேயர் காலத்தில் உருவாக்கப்பட்ட துறைமுகம் எது ?
19. தொட்டபெட்டா சிகரம் எந்த மலைத்தொடரில் உள்ளது ?
20. மனித உடலில் தோலின் மூலம் வெளியேறும் கழிவு எது ?

### விடைகள்:

1. கருநீலம், 2. 6 ஆண்டுகள், 3. 640 ஏக்கர், 4. ஸ்பெயின், 5. தேக்கு, 6. அனிமா மீட்டர், 7. பனை மரம், 8. தொண்டை, 9. நீலகிரி, 10. தென் கொரியா, 11. ரூஸ்வெல்ட், 12. கார்பன்-டை ஆக்ஸைடு காரணமாக, 13. இந்தியா, 14. பல்வலி, 15. வில்லியம் பூத், 16. டோரா, 17. செயின்ட் பீட்டர்ஸ் தேவாலயம், வாடிகன் நகரம், 18. கடலூர், 19. நீலகிரி மலைத்தொடரில், 20. வியர்வை

19ஆம் பக்கத்தின் விடைகள்

### "அப்போஸ்தலனாகிய யோவான்!" - பதில்கள்

1) கர்த்தரின் வெகுமதி (அல்லது) கர்த்தரின் கிருபை, 2) செபெதேயு/சலோமி
3) மீன்பிடித் தொழில், 4) யோவான் ஸ்நானகன், 5) அன்பின் சீஷன், 6) ரோம அரசாங்கம்
7) அன்பு - 80/சாட்சி - 70, 8) யோவானிடம், 9) பத்மு, 10) பத்மு தீவிலே

# குழந்தைகளின் பரதீசு!

சங்கீதம் 127:3 சொல்கிறது: ‘‘இதோ பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்தரம், கர்ப்பத்தின் கனி அவரால் கிடைக்கும் பலன்’’. ஏசா. 8:18 சொல்கிறது: ‘‘இதோ, நானும் கர்த்தர் எனக்கு கொடுத்த பிள்ளைகளும் சீயோன் பர்வதத்தில் வாசமாயிருக்கிற சேனைகளின் கர்த்தராலே இஸ்ரவேலில் அடையாளங்களாகவும் அற்புதங்களாகவும் இருக்கிறோம். ஏசா. 54:13 சொல்கிறது: ‘‘உன் பிள்ளைகளெல்லாரும் கர்த்தரால் போதிக்கப்பட்டிருப்பார்கள். உன் பிள்ளைகளுடைய சமாதானம் பெரிதாயிருக்கும். மத்தேயு 19:14, 15ல் ‘‘இயேசுவோ சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள். அவர்களைத் தடை பன்னாதிருங்கள். பரலோக ராஜ்ஜியம் அப்படிப்பட்டவர்களுடையது என்றுச் சொல்லி அவர்கள் மேல் கைகளை வைத்து அவர்களை ஆசீர்வதித்தார்.

ஒரு திருமண வாழ்க்கையின் பிரதான நோக்கமே, கணவன் மனைவி ஒன்று சேர்ந்து தேவபத்தியுள்ள சந்ததியை பெற்று அவர்களை தேவனுக்கேற்றபடி வளர்த்து ஆளாக்குவதேயாகும். ஆதியாகமத்திலே, ஆண்டவர் ஆதாம் ஏவாளை சிருட்டித்துவிட்டு ‘‘நீங்கள் பலுகி பெருகி பூமியை நிரப்புங்கள்’’ என்றுச் சொல்லி இவர்களை ஆசீர்வதித்தார். கர்த்தர் உங்களுக்கு கொடுத்த குழந்தையை எப்படி வளர்ப்பது என்று தேவனிடம் கேட்டுத் தெரிந்துக் கொள்ளுங்கள். சிம்சோனின் பெற்றோர்கள் கூட பிள்ளையை வளர்க்கும் முறையைத் தெரிந்துக் கொள்ள தேவ தரிசனத்தை ஒன்றுக்கு இரண்டு முறை நாடி பெற்றுக் கொண்டார்கள். சிம்சோனின் தாய் தன்னுடைய பிள்ளைக்காக அநேக தியாகங்களை செய்து கருவிலேயே அவனைக் கண்ணும் கருத்துமாய் கவனித்துவந்தார்கள்.

ஒரு குழந்தை பிறந்தவுடன் அந்தக் குழந்தை பருவம் என்பது வளர்ச்சியின் பருவம். அந்தப் பருவம் கண்ணாடி போன்றது. கவனமாக கையாள வேண்டும். பிறகு கொஞ்சம் வளர்ந்தவுடன் அவர்கள் நவநாகரீகத் தொழில் நுட்பத்தின் பாதையில் பயணிக்க ஆரம்பித்து விடுவார்கள். பேரன் தாத்தாவிடம் வந்து உங்கள் காலத்தில் 4G 5G எல்லாம் இருந்ததா? பதிலுக்கு தாத்தா சொன்னார்: இல்லை பேரா, எங்களுக்கு இருந்ததெல்லாம் பிதா மாதா எ



குருஜிதான் என்றார். அந்தக் காலத்தில் தாயும் தந்தையும், ஆசிரியரும் பாடத்தோடு பண்பாட்டையும் போதித்தார்கள். இன்றைய காலம் Google காலம். இன்றைய சந்ததி Google சந்ததி என்று அழைக்கப்படுகிறது. இன்றைக்கு கலாச்சாரத்தையே பாழ்படுத்தும் இணையதளங்கள், COMPUTER GAMES, பெற்றோர்களின் பணத்தை மட்டுமல்ல, பிள்ளைகளின் நேரத்தையும் திருடிக் கொண்டுப்போகிறது. இந்தக் குழந்தை வளர்ப்பு என்பது ஒரு கலை. காட்டுச் செடிகள் தானாய் முளைத்து வளர்ந்துவிடும். வீட்டுத் தோட்டமோ வளர்ப்பவன் இல்லாவிட்டால், வாடிப்போய்விடும். பிள்ளைகள்கூட தாமாய் வளர்ந்துவிடமாட்டார்கள். அவர்கள் வளர்க்கப்பட வேண்டும்.

ஆகவே,

1) உங்கள் பிள்ளைகள் எல்லாரும் காத்தரால் அருளப்பட்ட கர்ப்பத்தின் கனி என்று உணருங்கள்.

2) பிள்ளைகளை வளர்க்கும் முறைகளை தேவனிடத்தில் கேட்டு பின்பற்றுங்கள்.

3) பிள்ளைகளை பரிசுத்தமாய் வளர்க்க பெற்றோர்கள் சில தியாகங்களைச் செய்ய வேண்டும்.

4) பிள்ளைகளை கர்த்தருக்கேற்ற பயத்தில் வளர்த்திடுங்கள்.

5) பிள்ளைகளை கோபமூட்டாதிருங்கள்.

6) பிள்ளைகளுக்கு ஜெபிக்க கற்றுக்கொடுத்து ஜெபிக்க வையுங்கள்.

7) வேத வசனத்தைக் கற்றுக் கொடுத்து ஒவ்வொரு நாளைக்கு ஒரு வசனம் என்று மனப்பாடம் செய்ய வையுங்கள்.

8) உங்களோடு கூட கர்த்தருடைய ஆலயத்திற்கு அழைத்துச் செல்லுங்கள்.

9) பிள்ளைகளுடைய அன்றாட நடவடிக்கைகளை கண்காணித்துக் கொண்டிருங்கள்.

10) பணத்தின் அருமையை கற்றுத் தாருங்கள்.

11) கேட்டதையெல்லாம் வாங்கிக் கொடுக்காதீர்கள்.

12) பிள்ளைகளுடைய நல்ல செயல்களை பாராட்டி அவர்களை உற்சாகப்படுத்துங்கள்.

13) தகப்பனோ தாயோ பிள்ளையைக் கண்டிக்கும்போது மற்றவர்கள் தலையிடாதீர்கள்.

14) குடும்ப ஜெபத்தில் பிள்ளைகளையும் ஈடுபடுத்தி அவர்களுக்கு பயற்சியளியுங்கள்.

15) பிள்ளைகளுக்கு முன்பாக பெற்றோர்கள் முன் மாதிரியாக நடந்துக் காட்டுங்கள்.

இப்படி நீங்கள் செய்யும் போது, அந்தக் குடும்பம் ஒரு குட்டி பரலோகமாக மாறிவிடும். மாத்திரமல்ல, எத்தனையோ கோடிக்கணக்கானோர் பிள்ளை பாக்கியத்திற்காக ஏங்கிக் கொண்டிருக்கையில் உங்களை நம்பி ஒரு கர்ப்பத்தின் கனியை கொடுப்பது எத்தனை பெரிய தேவ தயவு. நம்முடைய ஆண்டவரே பிள்ளைகளுக்கு தாயும் தகப்பனுமாயிருக்கிறார். நாமெல்லாரும் பிள்ளைகளை வளர்க்கும் CARETAKERS மாத்திரமே. கர்த்தர் உங்களுக்குப் பாராட்டின அந்த தேவ தயவிற்காக கர்த்தரை ஸ்தோத்தரியுங்கள். ஆமென்!

# வங்கிக் கணக்கின் (Bank Account) விபரம்:

ஏலிம் ஊழியங்கள் மற்றும் அன்றன்றுள்ள அப்பம் ஊழியங்களை பொருளாதார உதவிகளால் தாங்க விரும்பினாலோ, காசோலை (Cheque) / கேட்பு வரைவோலை (Demand Draft) மூலம் அனுப்புவதாக இருந்தாலோ, கீழ்க்காணும் ஏதேனுமொரு பெயரில் எடுத்து எமது அலுவலக முகவரிக்கு பதிவு அஞ்சல் (Registered Post) அல்லது தூதஞ்சல் (Courier) மூலமாக அனுப்பலாம்.

1. ACCOUNT NAME : **MR. JOSEPH OSBORNE JEBADURAI**
   ACCOUNT NO. : 49 510100003062

2. ACCOUNT NAME : **ANTANTULLA APPAM TRUST**
   ACCOUNT NO. : 49510200000122
   BANK NAME : **BANK OF BARODA**
   IFSC CODE : BARB0KODAMB (5TH CHARACTER IS ZERO)
   SWIFT CODE : BARBINBB
   BRANCH & CODE : UNITED INDIA COLONY, KODAMBAKKAM & 4951 CHENNAI – 600 024.

**APPAM - GOOGLE PAY : 98406 95296**

**ELIM - GOOGLE PAY : 98848 77607**

**Address : J. JOSEPH OSBORNE JEBADURAI**
**50, Railway Station Road, Kodambakkam, Chennai - 600 024. Tamil Nadu**

1. ACCOUNT NAME : **ELIM GLORIOUS REVIVAL CHURCH**
   ACCOUNT NO. : 49510100000230

2. ACCOUNT NAME : **MR. JOSEPH OSBORNE JEBADURAI**
   ACCOUNT NO. : 49510100003063
   BANK NAME : BANK OF BARODA
   IFSC CODE : BARB0KODAMB (5TH CHARACTER IS ZERO)
   BRANCH : KODAMBAKKAM CHENNAI - 600024




வாசித்து விட்டீர்களா!?

# ஒலிவமரக் கன்றுகள்

"வாசிப்புப் பழக்கம் மற்றும் படைப்பாற்றல் சிந்தனைகளை மேம்படுத்துவதுடன் தெய்வீக ஒளியில் எதிர்காலத்தை அமைத்துக் கொள்ள அழைத்துச் செல்லும் நீதி போதனை அடங்கிய சிறார் மாத மின் இதழ் "
(Monthly E-Magazine)

இடம்:
**ஏலிம் மகிமையான எழுப்புதல் தேவாலயம்**
எண். 50, இரயில்வே ஸ்டேஷன் ரோடு, கோடம்பாக்கம்-24
+91-9003067777, 9884908777, 9884916777

ஆசிரியர். J. ஜோசப் ஆஸ்பார்ன் ஜெபத்துரை

---

அதிகாலையில் என்னைத் தேடுகிறவர்கள் என்னைக் கண்டடைவார்கள். நீதிமொழிகள் 8:17

Elim GRC

ஏலிம் மகிமையான எழுப்புதல் தேவாலயம்

# அதிகாலை ஆராதனை

தினமும் காலை 6:15 மணிமுதல் 7:15 மணிவரை

நேரடியாக கலந்துகொண்டு ஆண்டவர் அருளும் ஆசீர்வாதத்தை பெற்றுக்கொள்ளுங்கள்.

அன்புடன் அழைக்கும்

- அதிகாலை ஜெபம்
- அதிகாலை ஆராதனை
- அதிகாலை ஸ்தோத்திரபலி

இடம்:
**ஏலிம் மகிமையான எழுப்புதல் தேவாலயம்**
எண். 50, இரயில்வே ஸ்டேஷன் ரோடு, கோடம்பாக்கம்-24
+91-9003067777, 9884908777, 9884916777

Date of Publication on Last Week of Previous Month
REGISTRAR OF NEWSPAPER FOR INDIA
TNTAM/2006/17835
Posted on 19th & 20th at RMS/1
Patrica Channel, Egmore, Ch - 8.




If undelivered please return to:

**Elim Glorious Revival Church**

#50, Railway Station Road, Kodambakkam, Chennai - 600024, India
for 24X7 Prayer: 91-9444322200, 9444322211
Email: enquiry@elimgrc.com, Website: www.elimgrc.com